பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை (03-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 98

# வலிகாமத்தில் நேற்று 3 இடங்களில் அதிரடி!

## புலிகளின் தாக்குதல்களில் 7 படையினர் உயிரிழப்பு

சாவகச்சேரி, மார்ச் 3

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள வலிகாமம் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய மூன்று வெவ்வேறு அதிரடித் தாக்குதல்களில் ஏழுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்; மேலும் பலர் காயமடைந்தனர்.

கொழும்புத்துறை, மாதகல் மற்றும் விளான் பகுதிகளில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

## மாதகல் தாக்குதலில் படையினர் மூவர் பலி!

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

நேற்றுக் காலை 5.55 மணியளவில் மாதகல் நீராவியடியில் வைத்து இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும்—

ஏனையோர் காயங்களுடன் தப்பியோடினர் என்றும்—

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் இல்லை என்றும்— அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது ரி-81 ரகத் துப்பாக்கி — 1, ரி-56 ரகத் துப்பாக்கிகள் — 2, ஏ. கே. மகஸின்கள் — 3, கைக்குண்டுகள் — 2, நடுத்தர ரவைகள் — 458, வயர் றோல் — 1, புல்லட் புறூவ் ஜக்கட் ஹோல்ஸர் — 1 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## விளானில் சிப்பாய் பலி!

நேற்றுக் காலை 7.45 மணியளவில் விளான் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் எதிர்பாராமல் இடம்பெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் —

ஏனைய சிப்பாய்கள் தப்பியோடினர் என்றும் —

இம்மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்புத்துறையில் 3 படையினர் உயிரிழப்பு

நேற்றுக்காலை 8.30 மணியளவில் கொழும்புத்துறையில் நிலைகொண்டிருந்த படையினர் தமது காவலரணிலிருந்து சுமார் 150 மீற்றர் முன்னேறி வந்த போது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்

இத்தாக்குதலில் மூன்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர் என்றும் —

ஏனையோர் தப்பியோடி விட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## தற்கொலைப் படையின் 25 உறுப்பினர்கள் கைதாம்!

கொழும்பு, மார்ச் 3

அண்மையில் கொழும்பிலும் வவுனியாவிலும் வைத்து நூற்றுக் கணக்கான புலிகள் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் —

அவர்களில் இருபத்தியைந்து பேர் புலிகள் இயக்கத்தின் தற்கொலைப் படை உறுப்பினர்கள் என்றும் —

பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருப்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் கடும் மோதல் படையினருக்கு பேரிழப்பு!

### 9 வேங்கைகள் வீரச்சாவு

சாவகச்சேரி, மார்ச் 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மயிலவெட்டுவான், சந்தனமடு ஆறு, பெருமாவெளி ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் படையினர் முன்னேறிய போது அவர்கள் மீது புலிகள் பெரும் தாக்குதலை நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6.30 மணி வரை கடும் சண்டை இடம் பெற்றது. சண்டையின்போது பெரும் சேதங்களை எதிர் கொண்ட படையினர் பின் வாங்கி ஓடினர் என அறிவிக்கப்பட்டது.

இம்மோதல் இடம்பெற்ற சமயம் எல்லைப்புற இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருந்தன

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 9 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

மயிலவெட்டுவானில் சுமார் 45 நிமிட நேரம் நடந்த சண்டையில் எட்டுப் படையினர் காயமடைந்ததாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-6)

## ஷெல் தாக்குதல்

மந்திகை, மார்ச் 3

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 5.30 மணியளவில் தென்மராட்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எழுதுமட்டுவாள், கிளாலி பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன சேதவிபரங்கள் தெரிய வரவில்லை

(உ-15)

# மன்னாரிலிருந்து பேருவளை வரை கடற்படையின் பாதுகாப்பு வேலி!

கொழும்பு, மார்ச் 3

படகுகள் மற்றும் கப்பல்கள் மூலம் கொழும்புக்கு வெடிப் பொருள்கள் மற்றும் ஆயுதங்களைப் புலிகள் கடத்துவதற்கு வாய்ப்பிருப்பதால் —

மன்னாரிலிருந்து பேருவளை வரையாகவுள்ள கடலோரத்தில் கடற்படையினர் பாதுகாப்பு வேலி ஒன்றை அமைத்திருக்கின்றனர் —என்று கடற்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடற்படையின் தாக்குதல் கப்பல்கள், அதிவேகப் படகுகள் ஆகியவற்றைக் கொண்டு இந்தப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதாகவும்—

கடலில் இருந்தவாறு எதிரிக் கப்பல்களின் நடமாட்டம் குறித்து நோட்டமிடப்படுவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்

(உ-6)

# கிழக்கு கடலில் புலிகளின் கப்பல்கள்? கடற்படை, விமானப்படை தேடுதல்!

கொழும்பு, மார்ச் 3

புலிகளுக்கு என ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருள்கள் ஏற்றிய மூன்று கப்பல்கள் கிழக்குக் கடற் பிரதேசம் ஊடாக இலங்கைக் கடல் எல்லைலக்குள் பிரவேசித்துள்ளது எனக் கிடைத்துள்ள தகவலை அடுத்து விமானப் படையும் கடற்படையும் இணைந்து கடந்த வியாழன் இரவு முதல்—பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பித்திருப்பதாக ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேகத்துக்குரிய இரு படகுகளை படையினர் பிடித்து தீவிர விசாரணை நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது

(உ-6)

# உடுவிலில் ராணுவம் துப்பாக்கிச் சூடு; ஆறுக்கும் மேற்பட்ட வயோதிபர் பலி?

மந்திகை, மார்ச் 3

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள வலிகாமம் பிரதேசத்தில், உடுவில் தெற்கு, புதுமடம் பகுதியில் படையினர் ஆறுக்கும் மேற்பட்ட வயோதிபர்களை சுட்டுக் கொன்றுள்ளனர்.

பெப்ரவரி முதலாம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து இப்போது தகவல் கிடைத்திருக்கிறது.

பருத்தித்துறை ஒடக்கரை, கல்லூரி வீதியில் தங்கியுள்ள ஒருவரின் இல்லத்தில், சுட்டுக் கொலை செய்யப்பட்டவர்களில் இருவரின் மரண நினைவு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மாணிக்கம் இரத்தினம் (வயது 60), அவரது மைத்துணரான சின்னத்தம்பி இராசையா (வயது 85) ஆகிய இருவரது மரண நினைவுமே இரத்தினத்தின் மகனான தர்மரத்தினம் இராசேஸ்வரி என்பவரது வீட்டில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இவர்களைவிட புதுமடத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிண்ணியடியில் படைகள் அட்டகாசம்! தமிழரின் இருநூறு வீடுகள் அழிப்பு!!

வாழைச்சேனைக்கு அருகே அமைந்துள்ள கிண்ணையடியில் படையினர் மேற்கொண்ட அட்டகாசத்தில் தமிழர்களின் 125 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் மேலும் 90 வீடுகள் உடைத்து சேதமாக்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்ற [illegible] உறுப்பினர் சு. கந்தையா என்பவர் தெரிவித்தார்.

''படையினரின் ஷெல் தாக்குதல்களில் சில வீடுகள் சேதமடைந்தன; ஏனைய வீடுகள் படையினரால் எரிக்கப்பட்டன: சுடுகாடு போல அந்தக் கிராமம் காட்சியளிக்கிறது'' — என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அப்பகுதிகளில் இருந்து மக்கள் முற்றாக வெளியேறி விட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

படையினரின் இந்த அட்டகாசத்துக்கு முதல் நாளும், மூன்று நாள்களுக்கு முன்னரும் அப்பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் இரண்டு தடவைகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு கை பாவனையிலுள்ள இத்தாலிரக லாம்பிறட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. சந்திக்கும் நேரம்: மாலை 5 மணிக்கு மேல். கு. நித்தியானந்தன், மே/பா தம்பு மயில்வாகனம், மதுவன் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை. (40846)

நல்ல நிலையிலுள்ள ஸ்போட்ஸ் ரேசிங் சைக்கிள் ஆறு மாற்று கியருடன் கூடியது. S. பூபாலன், C/o திருமதி தனபாலசிங்கம், வாகையடி றோட், சாள்ஸ் லேன், மட்டுவில் தெற்கு. (40848)

### ஜெனரேட்டர் விற்பனை

யன்மார் (Yanmar Diesel) 2000W. (240V), றொபின் (Robin) 28 00W. (240V), ஹொண்டா (Honda) 1500W. (110-220V), பற்றறி 200A.M. (Lucas 12V). தொடர்பு கொள்ளும் முகவரி; செ. மகேஸ்வரன், சரசாலை வடக்கு, சரசாலை. (40881)

### தேவை

பழைய கொப்பி, புத்தகங்கள், பேப்பர் வகைகள் தேவை. விலை விவரம் நேரில். தொடர்பு: அண்ணா தொழிலகம், ஐயா கடை சந்தி, மீசாலை. (40996)

### வாடகைக்குத் தேவை

கிணறு, மலசலகூட வசதியுள்ள வீடு (சிறியதாயினும்) வாடகைக்குத் தேவை. முற்பணம் தரப்படும். சக்தி தாசன், மே/பா வணமாலி விற்பனை நிலையம், 19, கண்டி வீதி, சாவகச்சேரி. (40892)

### தவறிவிட்டது

சபாரத்தினம் இரவிந்திரன், மயிலிட்டி, காங்கேசன்துறை என்னும் முகவரியுடைய 622442817V இலக்க அடையாள அட்டை 29 - 2 - 96 அன்று மந்திகைக்கும், தும்பளைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் ச. இரவீந்திரன், தாதிய உத்தியோகத்தர், மந்திகை என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (40320)

### மணமகள் தேவை

34 வயதுடைய, (பூரம் நட்சத்திரம்) B.Sc. (Eng.), I.C.M.A. பட்டமுள்ள மணமகனுக்கு 30வயதுக்குட்பட்ட அழகான மணமகள் தேவை. டாக்டராக இருந்தால் விரும்பத்தக்கது. C/o இல. 55, உதயன், சரசாலை தெற்கு. (40886)

### மணமகன் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த 38 வயது வெள்ளைநிறம், 4' 5'' உயரம் உடைய அழகிய பல் வைத்தியம் படித்த பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு: திருமதி மா. காசிநாதன், மே/பா செ. பத்மகாந்தன் (ஆசிரியர்) ''வள்ளி அரேமியம்'', கச்சாய் வீதி, கொடிகாமம். (40889)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் விரைவாக ஆங்கிலம் பேசப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, C/o R. நடராசா, மனல்வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சிறு குழுவாக மட்டும்). (40955)

## ஆண்டு - 5 புலமைப் பரிசில் 1995

பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்-03 விடைகளுடன் எல்லா புத்தகசாலையிலும் கிடைக்கும்.

வெளியீடு: **BOND** (4032)

## உப்பு விற்பனை விலை மாற்றம்

01 - 3 - 1996 முதல் உப்பின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், வணிகர்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

தற்போதைய நிலைமை காரணமாய் ஏற்படும் செலவுகளை ஈடுசெய்யும் வகையிலும், உற்பத்தி முன்னேற்றம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ளவும் 1996 - 03 - 01 முதல் உப்பு விற்பனை விலை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**புதிய விலை:-**

மொத்த விலை - கிலோ ஒன்று ரூபா, **12/-**

சில்லறை விலை - கிலோ ஒன்று ரூபா, **14/-**

யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம்

(சி/2985)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய ஸ்தாபகர் அமரர் முருகேசு (அதிபர்) அவர்களின் புத்திரரும், வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய தாக சாந்தி நிலையத் தலைவருமாகிய

### மு. சோதீஸ்வரனின்

மரணத்தையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வெள்ளெருவைப் பிள்ளையாரை வேண்டுகிறோம்.

வெள்ளெருவைப் பிள்ளையார்,
சன சமூக நிலையம்,
வெள்ளெருவைப் பிள்ளையார்,
தாக சாந்தி நிலையம்,
வெள்ளெருவைப் பிள்ளையார்,
பாலர் பாடசாலை.
(கோப்பாய் மத்தி)

(40961)

## தேடுகிறார்

''சண்முகஜோதி'', பத்தாவலை, மல்லாகத்தை சேர்ந்த

திரு. சண்முகராசா, திரு. சந்திரதேவா

இருவரும் தயவுசெய்து கீழ் காணும் விலாசத்திற்கு உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

மா. மங்களேஸ்வரன் (ஈசன்)
HARBOUR VIEW APT.,
994/2 16th LANE,
COLOMBO - 13.

(40901)

## வாடிக்கையாளர்களுக்கோர் முக்கிய அறிவித்தல்

சங்கானை, சுன்னாகம், யாழ்ப்பாணம், ஆவரங்காலில் இயங்கிவந்த

# பேராதெனியா

### பல் கட்டும் சிகிச்சை அகம்
### கண் பரிசோதனை கூடம்

470, கண்டி றோட், கொடிகாமம். (புகையிரத நிலையத்திற்கு எதிர், மேல்மாடி)

மந்திகை (அரசினர் வைத்திய சாலைக்கு அருகில்)

மீண்டும் ஆரம்பித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தால் சிறப்புத் தேர்ச்சி பெற்றவரால் நடத்தப்படும் இந்நிறுவனத்தில் நவீன முறையில் கண் பரிசோதித்து, கொம்பியூட்டர் முறையில் மூக்குக் கண்ணாடியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை வாடிக்கையாளர்கட்கு மன மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகம்

(40964)

## மரண அறிவித்தல்கள்

### சவிரிமுத்து- மேரி மாகிறேற்

ஊர்காவற்றுறை மேற்கைப் பிறப்பிடமாகவும், புலோப்பளை அரசன் குடியிருப்பு மேற்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து மேரிமாகிறேற் (இரட்ணம்) 02 - 03 - 1996 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சவிரிமுத்துவின் அன்பு மனைவியும், மலரம்மா, புனிதம்மா, இருதயதாசன், அமிர்தராணி, இராசநாயகம் (பூவால்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சவிரிமுத்து தம்பையா, நிற்றா சறோஜினி, அருமைநாயகம், நிற்றம்மா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரது தற்காலிக முகவரியில் (02 - 03 - 1996) நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி அருமைநாயகம்.
(மனைவி)

அரசன் குடியிருப்பு,
புலோப்பளை - பளை,
பளை.

(40959)

### கணபதிப்பிள்ளை தருமலிங்கம்
(நயினாதீவு)

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தருமலிங்கம் 28-2-96 ல் நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், முருகேசு - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லமுத்துவின் அன்புக் கணவரும், சண்முகலிங்கம், உருத்திரலிங்கம், சிவயோகலிங்கம், கணேசலிங்கம், கோபாலலிங்கம், உமாகரலிங்கம், நடேசலிங்கம், நீலம்பிகை, சறோயினிதேவி, மாணிக்க பூபதி (மாணிக்கம்), சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்துலிங்கம், மருதலிங்கம், தருமலிங்கம், பாலசிங்கம், சகுந்தலாதேவி, திரிபுராம்பாள், ஜெயசண்முகபாமா, அன்னபூரணி, நந்தாவதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-2-96 ல் நயினாதீவில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. தருமலிங்கம் (தருமு)
(மருமகன்)

மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

(40899)

## நகரசபை, சாவகச்சேரி
# கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி புதிய பஸ்நிலையக் கடைகளுக்குப் பின்புறமாக அமைந்த சபைக்குச் சொந்தமான 650 ச. அடி விஸ்தீரணம் கொண்ட நிலத்தை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் நிபந்தனையுடன், தற்காலிக வர்த்தக நிலையம் கேள்விக்காரரால் அமைக்கும் நோக்கத்திற்காக வழங்குவதற்கான கேள்விகள் **12 - 03 - 1996** மு. ப. 10. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| சாவகச்சேரி பஸ் நிலையக் கடைகளுக்கு பின்பகுதியில் அமைந்த 650 ச.அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் | ரூபா 40,000/- | ரூபா 1,000/- | ரூபா 500/- |

மேற்படி கேள்விப் படிவக் கட்டணமும், கேள்வி வைப்புக் கட்டணமும் செலுத்துவதின் பேரில் கேள்விப் படிவங்களை 08-03-1996 ஆம் திகதி பிற்பகல் 12-30 மணி வரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. சித்திகரக் கேள்விக்காரர் சபையால் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக முழுத் தொகையையும் பணமாகச் செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இது தொடர்பான ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- இது ஒரு தற்காலிக ஏற்பாடாகையால் இடம் பெயர்ந்த அதிக ஊழியர்களைக் கொண்டதும் தற்போது வசதியற்று இருப்பதுமான இதுவரை எந்த இடங்களிலும் வியாபார நிலையங்களை அமைக்காதவர்களுமான பெரிய தொழில் ஸ்தாபனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சி. நடராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி.
22-02-1996

(சி/4070)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பாடம் புகட்ட முடியாதா?

திருகோணமலை உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலை அகதிகள் முகாமில்' கடந்த இரண்டரை வருடங்களாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் பராமரிப்பில் இருந்த சுமார் 500 தமிழர்களை —

ஸ்ரீலங்கா இராணுவத்தினர், ஆயுதமுனையில் பலவந்தமாகக் கூட்டிச் சென்றது குறித்து, அந்தத் தூதரகம், ஜெனிவாவில் உள்ள தனது தலைமை அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்திருக்கிறது.

குச்சவெளிப் பகுதியில் தமக்கு மனித கேடயமாகப் பயன்படுத்தும் நோக்குடன், எவ்வித முன்னறிவிப்போ ஒழுங்கான ஏற்பாடோ இன்றி, அந்த மக்களின் விருப்பத்துக்கு மாறாக படையினர் ஆயுதமுனையில் கடத்திச் சென்றிருக்கின்றனர்.

அவர்களைப் பராமரித்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அனுமதி பெறாமல், மரியாதையின் நிமித்தமான அறிவித்தலோ, கலந்தாலோசனையே தானும் இல்லாமல் அத்துமீறல் செய்திருக்கின்றனர்.

தமிழர்கள் என்றால் அவர்களைத் தமது மனம்போகும் போக்கில் எதுவும் செய்யலாம் என்ற எண்ணத்துடன், ஐ. நா. தூதரகத்தின் சர்வதேச விதிகளை மீறி ஆட்கடத்தல் செய்துள்ளனர்.

மனித நேயத்துடன் தொண்டு செய்யும் சர்வதேச அமைப்பு ஒன்றுக்கு, ஒரு துளி மரியாதையும் கொடுக்காது, அதனை அவமதித்து அடித்ததற்கு இச்செயல் சமமாகும். சர்வதேச விதிகளை மீறிய பெருங்குற்றமும் ஆகும்.

சர்வதேச அமைப்புகளையும், ஏனைய தொண்டர் நிறுவனங்களையும் தனக்குத் தேவை ஏற்படும்போது ஆசை வார்த்தை பேசி காரியத்தைச் சாதுரியமாக முடித்துக்கொள்ளும் அரசு —

அவை போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனித நேயத்தின் பாற்பட்டு உதவும் போது, அவற்றுக்கு வேண்டாத தொல்லைகளைக் கொடுத்து அவமதிக்கின்றது.

அந்த அமைப்புகளும் நிறுவனங்களும் தன்னைப் போலவே தமிழர்களை அடிமைகளாக நடத்த வேண்டும் என்று எதிர்பாக்கின்றது. அவை தமது சொந்தக் கோட்பாடுகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளும் போது ஸ்ரீலங்கா அரசுக்குக் கோபம் வருகிறது! சர்வதேச விதிமுறைகளைக் கூட அசட்டை செய்து ஆணவத்தனமாக நடக்கிறது!

ஸ்ரீலங்கா அரசின் இந்த ஆணவத்தையும், சர்வதேச அமைப்புகளுக்கு இழைக்கும் குற்றங்களையும், அவை தக்கபடி கவனித்துத் தண்டிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

தனது நாட்டுக்குள் தான் எதனையும் செய்து கொள்ளலாம்; யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற அகந்தையை நீக்குவதற்கு, ஸ்ரீலங்கா அரசின் நட்டாமுட்டித் தனத்தை சர்வதேச மட்டத்தில் வெளிப்படுத்திப் பாடம் புகட்ட வேண்டும். அதன் அதிகாரத் தனத்தை, சிறுமையை அம்பலப் படுத்த வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு இப்படி அடாவடித்தனமாக, அநாகரிகமாக நடந்து கொள்கிறதே; நாம் விலகிச் செல்வோம்; என்ற அணுகு முறையை சர்வதேச அமைப்புகள் கைக்கொள்ள முனையக் கூடாது. அதற்குப் பதிலாக தமது மனித நேய உதவிகளைப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து செய்யவேண்டும்.

# பல்கலைக்கழகங்களில் மீண்டும் ஜே. வி. பி. தீவிர பிரசார இயக்கம்

கொழும்பு, மார்ச் 3

பல்கலைக்கழகங்களில் மீண்டும் ஜே. வி. பி. இயக்கம் தலைதூக்கி வருகிறது.

ஜே. வி. பி. இயக்கத்தின் மாணவர் அமைப்பு பல்கலைக்கழகங்களுக்கு உள்ளேயும், பல்கலைக்கழகங்களுக்கு வெளியேயும் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மற்றும் பதவியா, மொனராகல, திருகோணமலை ஆகிய இடங்களிலும் ஜே. வி. பி. மாணவர் பிரிவின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

ஜே. வி. பியின் மாணவர் அமைப்பான ''சமாஜவாதி ஷிஸ்யா சங்க மய'' 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக தனது சொந்தப் பெயரில் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

ஜே. வி. பியைப் பலப்படுத்துவதே தமது நோக்கம் என்று ஜே. வி. பியின் தகவல் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் சமீபத்தில் பெரும் தொகையான போஸ்டர்கள் ஒட்டப்பட்டதற்கு தமது கட்சியே காரணம் என்றும் அவர் கூறினார்.

ஜே. வி பியின் மாணவர் அமைப்புடன் ஜே. வி. பியின் மற்றைய பிரிவுகளும் புனரமைக்கப்பட இருப்பதாக விமல் வீரவன்ச தெரிவித்தார். (இ)

## கல்விப் பேரவை கூட்டம்

கிளிநொச்சி, மார்ச் 3

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் மாதாந்தக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கேட்போர் கூடத்தில் தலைவர் வண. பிதா பிரான்ஸிஸ் யோசப் அடிகள் தலைமையில் நடைபெறும். (உ)

## மாஹோவில் கொப்பிகள் பாடசாலை உபகரணங்கள்

அடுத்த வாரமளவில் பருத்தித்துறை வரவிருக்கும் 'மாஹோ' கப்பலில் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் எடுத்துவரப் படவிருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் இவற்றை எடுத்துவந்து விநியோகிக்கும்.

பாடசாலைகள் ஆரம்பமாவதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை— யுனிசெவ் அமைப்பு வழங்கியுள்ள 10 ஆயிரம் பென்சில்கள், கொப்பிகள் இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன. (இ.3)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் பொது மருத்துவ சிகிச்சை வாரம் இரு தினங்கள்

தென்மராட்சி, மார்ச் 3

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் பொது மருத்துவ சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து இம் மாதம் தொடக்கம் செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களும் பொது மருத்துவ சிகிச்சை நடத்தப்படவுள்ளது.

இந்த கிளினிக்குகளில் பெப்ரவரி மாதம் வரை சிகிச்சை பெற்ற நோயாளர்கள் மட்டுமே பார்வையிடப்படுவர் எனவும் —

புதிய நோயாளர்கள் மந்திகையில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் என்றும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் டாக்டர் செல்வி உ. சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலையில் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் 4 ஆயிரம் பேர் சிகிச்சை பெற பதிவு செய்துள்ளதாலும் —

வாரத்தில் ஆயிரம் நோயாளர்களுக்கு மேல் சிகிச்சை அளிக்கக் கூடிய மேலதிக வசதிகளான மருந்து வகைகள், வைத்தியர்கள், இடவசதிகள் ஆகியவை இல்லாததாலும்—

சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மேலும் அவர் தெரிவித்தார். (இ-117-13)

# ராணுவச் செலவினம், கடும் வரட்சி இலங்கைக்கு பெரும் பாதிப்பை தரும்

## வெரித்தாஸ் தெரிவிப்பு

மணிலா, மார்ச் 3

இலங்கையில் அளவுக்கு அதிகமான இராணுவச் செலவினங்களும் —

இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள வரட்சியும் — கடுமையான பொருளாதார நெருக்கடியை உருவாக்கும் என அதிகாரிகளும் ஆய்வாளர்களும் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

இப்படி ''வெரித்தாஸ்'' வானொலி குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே பஸ் மற்றும் மின் கட்டணங்கள் உயர்ந்து கொண்டிருக்கின்றன. வரட்சி காரணமாக விவசாயப் பொருள்களின் விலையும் உயரும் என கணிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் மோத சமீபத்தில் இஸ்ரேலிடமிருந்து 4 கிபிர் ஜெட் விமானங்களை கொள்வனவு செய்ய அரசு 325 கோடி ரூபாவைச் செலவிட்டுள்ளது.

இவ்வாறு செலவினங்கள் அதிகரித்தால் இந்த ஆண்டு மத்தியில் பணவீக்கம் இரட்டிப்பாகும் என்று வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறு வெரித்தாஸ் மேலும் குறிப்பிட்டது.

## திருமலையில் புலிகள் கைக்குண்டு வீச்சு

அதி கூடுதல் உஷார் நிலையில் படையினர் வைக்கப்பட்டுள்ள திருமலை நகரினுள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தி உள்ளனர்.

கடந்த திங்கள் இரவு 8.30 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

நகரினுள் காளி அம்மன் கோவிலடி சோதனைத் தடைமுகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் கைக்குண்டொன்றை வீசினர். அந்தப் பகுதியிலிருந்த பொலிஸ் ரிசேர்வ் கான்ஸ்டபிள் ஒருவர் இதில் காயமடைந்தார். (இ-7)

## இ. தொ. கா. கூட்டணி சந்திப்பு

இ. தொ. காவும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அரசின் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்து கொழும்பில் நடந்த வியாழன் மாலை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தி உள்ளன.

இந்தச் சந்திப்பின் போது தீர்வு யோசனைக்கு ஐ. தேகவின் ஆதரவைப் பெற்றுத் தருமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமானைக் கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## பிக்குகளையும் படையினர் சோதனை செய்வர்!

### ஒத்துழைப்புக் கோரப்படுகிறது

கொழும்பு, மார்ச் 3

விடுதலைப் புலிகள் பிக்குமார் வேடத்தில் கொழும்பு நகரில் திரிவதாக வெளிவந்த செய்திகளை அடுத்து பிக்குகளும் படையினரின் சோதனைக்கு உள்ளாக இருக்கின்றனர்.

சோதனை நிலையங்களில் ஒத்துழைப்பு வழங்குமாறு பிக்குகளிடம் பொலீஸார் வேண்டுகோள் விடுத்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-6)

## தமிழீழ வானொலி

1996-03-03 மாலை

- ★ 5-00 — ஆரம்பம்
- ★ 5-02 — எழுச்சி கீதம்
- ★ 5-10 — அழியாத கோலங்கள்
- ★ 5-30 — கதம்பம்
- ★ 6-00 — உங்கள் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — மீண்டும் உங்கள் தெரிவு
- ★ 6-30 —ஒலிபரப்பு நிறைவு

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996-03-03 இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — தொடர் நாடகம்
- ★ 8-20 — வரலாறு சொல்லும் பாடம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 அறிவிப்புகள் தொடர்ந்து 9 . 00 மணி வரை தாயகப் பாடல்கள்

1996 03-04 காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 —மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 வரை நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — அறிவிப்புகள் தொடர்ந்து 8 . 00 மணி வரை மீண்டும் நீங்கள் கேட்டவை.

# இடம்பெயர்ந்த இந்துக் குருமாருக்கு உதவுவது மக்கள் கடமையாகும்

## தங்கம்மா அப்பாக்குட்டி அழைப்பு

சாவகச்சேரி, மார்ச் 3

வேதம் ஓதி ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்வதை விட வேறு எந்தத் தொழிலையுமே செய்ய முடியாத நிலையில் உள்ளவர்கள் அந்தணப் பெரியோர்கள். இவர்கள் இடம் பெயர்ந்து அல்லலுறுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கலாகாது. நடமாடும் இத் தெய்வங்களைக் காப்பது இந்து மதத்தைச் சேர்ந்த சகலரினதும் கடமையாகும்.

இந்துக் குருமார் நலனோம்பு நிதியத்தின் சார்பில் அந்தணப் பெருமக்களில் ஒரு சாராருக்கு நிவாரணம் வழங்கும் முதற்கட்ட நிகழ்வு—

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மீசாலையில் உள்ள நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

அங்கு தொடக்கவுரை ஆற்றிய துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமை வகித்தார் கோமாதா பூசையுடன் நிவாரணம் வழங்கும் நிகழ்வு ஆரம்பமானது.

ஆதீன முதல்வர் தமது தலைமையுரையில் —

இந்துக் குருமார்கள் இடம் பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் இவ்வேளையில் அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு எம்மாலியன்ற சகல முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். கருணை உள்ளம் கொண்ட பெரியார்கள் இந்நிதியத்திற்கு உதவி [illegible] இடம்பெயர்ந்த குருமார்களுக்குப் படிப்படியாக உதவிகளை நல்க முடியும் — என்றார்.

நிதியத்தின் செயலாளர் திரு. ஆறு. திருமுருகன் தமது நன்றியுரையில் —

கருணை உள்ளம் கொண்ட பெரியார்கள் இந்நிதியத்திற்கு உதவிகள் புரிவதன் மூலம், குருமாரின் வாழ்வு வளம் பெறுவதற்கு உதவவும். வலிகாமம் பகுதி ஆலய அறக்காவலர்கள், பரிபாலன சபையினர், வழிபடுவோர், சைவ அபிமானிகள், சமய நிறுவனங்கள் அத்தனை பேர்களது உதவிகளையும் எதிர்பார்த்த வண்ணம் நிதியம் காத்திருக்கிறது — என்றார்.

இந்துக்குருமார் குருபீடாதிபதி சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார், சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ கை. மகேஸ்வரக்குருக்கள், பேராசிரியர் கோபால கிருஷ்ணன் ஆகியோரும் இந் நிகழ்வில் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு தம்பு

வண்ணாங்கேணி பளையில் வசித்த கதிர்காமு தம்பு நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிர்காமு சின்னம்மா அவர்களின் புத்திரனும், காலஞ்சென்ற செல்லத்துரையின் சகோதரனும், ரவீந்திரன், காலஞ்சென்ற சுஜேந்திரன், புஷ்பா, வளர்மதி (ஆசிரியர்), கோமதி, நிர்மலா, கலைச்செல்வி, வசந்தகோகிலம் ஆகியோரின் அன்புத் தந்தையும்—

அலோசியஸ், ஜேன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். நல்லடக்க ஆராதனை இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
(40966) துயருறும் குடும்பத்தினர்

## முருகேசு சோதீஸ்வரன் (சோதி)

கோப்பாய் வடக்கு அரசடியைப் பிறப்பிடமாகவும், தற்போது மட்டுவில் கிழக்கு வங்களாவடியைப் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அன்னபூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் முருகேசு சோதீஸ்வரன் (சோதி) 1-3-96 காலமானார்.

அன்னார் அமரர் ஆசிரியர் முருகேசு (வேலுப்பிள்ளை), இளைப்பாறிய தலைமை ஆசிரியர் அன்னபூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், சுந்தர்ராஜன் (பொறியியலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு, திருகோணமலை), ஆனந்தராஜன் (எலெக்றிக்கல் - எலெக்றோனிக் என்ஜினியர், லண்டன்), சத்தியராஜன் (பிரான்ஸ்), ஞானேஸ்வரன் (கனடா), தவரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், லிங்கேஸ்வரி, சந்திராதேவி, செல்வநாயகி, மங்கையர்க்கரசி, நற்குணராஜா ஆகியோரின் மைத்துனரும், சுஜிதன், விஜிதா, மயூரன், நரேன், தருமன், கஸ்தூரி ஆகியோரின் சிறிய தகப்பனாரும், அச்சுதன், சர்மிளா, கிரிசாந்தி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (3-3-96) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி அன்னபூரணம் (தாய்)
இளைப்பாறிய ஆசிரியர்
யோகரட்ணம் (சிவம்) (சகோதரன்)

தற்காலிக முகவரி:
நுணாவில் றோட், வங்களாவடி,
மட்டுவில் கிழக்கு. (40960)

திருமதி
## சிவக்கொழுந்து அன்னம்மா

கலைமகள் வீதி கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து அன்னம்மா நேற்று (02- 03- 96) காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் (முத்துசாமி ஆசிரியர்) அன்பு மனைவியும், மகாதேவாவின் (மின் ஊழியர்,கோப்பாய்)அன்பு தாயாரும், சறோஷாதேவியின் அன்பு மாமியாரும், ஸ்ரீதரன் (ஜேர்மனி), சிவாஜினி (யாழ். பல்கலைக்கழகம் தமிழ் சிறப்பு இறுதியாண்டு) ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03- 03- 96) அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று மாலை 3. 00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. மகாதேவா (மகன்)

தற்போதைய முகவரி:
சி. மகாதேவா (மின் ஊழியர், கோப்பாய்),
பொற் தொழிலாளர் வீதி, கல்வியங்காடு.
சங்கத்தானை, சாவகச்சேரி. (40965)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

## 3 மீனவர் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 3
வடபகுதியில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று சிங்கள மீனவர்களை விடுதலைப் புலிகள் விடுவித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்திருப்பதாக சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்றுத் தெரிவித்தது. (உ-6)

## ஊடுருவ புலிகள் புதிய உத்தியாம்!

கொழும்பு, மார்ச் 3
மேலதிக வைத்திய ஆலோசனைக்காகவும், சிகிச்சைக்காகவும் வருவதாகத் தெரிவித்து — கொழும்புக்குள் விடுலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களை ஊடுருவ வைக்கும் உத்தி குறித்து தகவல் கிடைத்திருப்பதாக பொலீஸ் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-6)

உடுவிலில் ..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தைச் சேர்ந்த கந்தன் பாலு (வயது 80), அவரது மனைவி பாலு பாக்கியம் (வயது 72), சின்னப்பு கனகம் (வயது 90), நாகமுத்து சுவாம்பிள்ளை (வயது 88), சீனிமுத்து (பெண் - வயது 85) ஆகியோரும் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதாக அறிய வந்துள்ளது.

இவர்களை விட மேலும் சிலர் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொலையுண்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

கொழும்பு மத்திய வங்கியில் குண்டு வெடிப்பு நடந்ததிற்குப் பழிவாங்கும் விதத்திலேயே படையினர் வயதான அப்பாவித் தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று ஊகிக்கப்படுகிறது

கொலையுண்டவர்களின் சடலங்களை அங்கு தங்கியுள்ள உறவினர்கள் புதைத்ததாகவும் இங்கு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-15)

தற்கொலைப்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தாக இலங்கை வானொலி அறிவித்தது.

இவர்களில் சுமார் 75 பேர் இரகசியத் தகவல்களை அறிவதற்கும், வெடி பொருள்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக புலிகளால் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கொழும்பில் இந்துக்குரு ஒருவருக்கு நேர்ந்த கதி!

கொழும்பு, மார்ச் 3
கொழும்பிலும் அதன் சுற்றுப் புறத்திலும் சிங்களவர்களின் வீடுகளில் வாழும் தமிழர்கள் அங்கிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதையடுத்து —

நீண்ட காலமாக வசித்த வீடு ஒன்றில் இருந்து இந்துக் குரு ஒருவர் இரவோடிரவாக வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது.

வெளியேறிய, சம்பந்தப்பட்ட இந்துக்குரு சற்றுத் தொலைவில் இருந்த ''லொட்ஜ்'' ஒன்றில் தங்கினாராம்.

அவர் சென்ற அன்றைய தினம் நள்ளிரவு 1. 30 மணியளவில் குறிப்பிட்ட ''லொட்ஜ்'' பாதுகாப்புப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

அந்தக் குரு மீது சந்தேகம் கொண்ட பாதுகாப்புப் படையினர் அவரை கைது செய்து கொள்ளுப்பிட்டிப் பொலீஸில் ஒப்படைத்தனராம்.

இவர் பூசை செய்யும் கொள்ளுப்பிட்டி இளந்தோப்பு அம்மன் ஆலயத்துக்குச் சென்ற பக்தர்கள் அவர் இல்லாததால் ஏமாற்றத்துடன் திரும்பினர் என கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ-2)

## பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலைதற்போது இல்லை

### லோறன்ஸ் திலகர் பேட்டி

மெல்போர்ன், மார்ச் 3
சந்திரிகாவின் ஆட்சியில் இனவாதப் பூதம் தற்போது மேலும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. தமிழ் மண் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. சமமான அடிப்படையிலும், நன்னம்பிக்கை அடிப்படையிலுமான பேச்சுவார்த்தைக்கு இச்சூழ்நிலை உகந்ததல்ல.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் லோறன்ஸ் திலகர்.

ஆஸ்திரேலியாவின் ''றேடியோ புறொண்ட்'' வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே இதனைச் சொன்னார்.

போர் மூலமாக, இராணுவத் தீர்வு மூலமாக பேரினவாத மேலாதிக்கத்தை ஸ்ரீலங்கா அரசு தமிழர் மீது திணிக்க முற்படுகிறது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

எமது போராட்ட நியாயத்தை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறி, அதன் மூலம் ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அதனை ஏற்றுக் கொள்ளச் செய்வதே எமது அரசியல் நிலைப்பாடாகும் — என்றும் திலகர் தெரிவித்தார். (அ-7)

## மழைவீழ்ச்சி இன்மையால் வன்னியில்உற்பத்திபாதிப்பு

வன்னி மாவட்டத்தில் இம்முறை போதியளவு மழைவீழ்ச்சி இல்லாததால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் வட பகுதியில் சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, உலக உணவு நிறுவனம் ஆகியவந்றுடன் தாம் தொடர்பு கொண்டு உணவுப் பற்றாக்குறை குறித்து விளக்கமளித்ததாகவும்—அவர் தெரிவித்தார்.

வன்னி பகுதியில் வதியும் இடம்பெயர்ந்த மக்களுக்கு குறை நிரப்பு உணவு விநியோகமும் —

ஏனைய மக்களுக்கு வரட்சி நிவாரணமும் வழங்குமாறு வவுனியாவில் நடந்த கூட்டம் ஒன்றில் தாம் கேட்டதாகவும் -

இதற்கு கொள்கை அளவில இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புலிகளுடன் ஜே. வி. பியினர்!

ஜே. வி. பி இயக்கத்தைச் சேர்ந்த இரு பெண்கள் தற்சமயம் விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவில் இணைந்துள்ளனராம். பொலீஸாரை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி இத்தகவலை வெளியிட்டது.

## குப்பையில் குண்டு

அண்மையில் மட்டக்களப்பு கல்வியங்காடு பிரதேசத்தில் குப்பை ஒன்றில் கிடந்த குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். காயமடைந்த மற்றொருவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-3)

எழில்மிகு தோற்றம், தரமான படைப்பு 'சிறிஅமலா'வின் நகைத்தெரிவு...
சிறிஅமலா நகைமாடம் கண்டி வீதி, சாவகச்சேரி.
(சபீதா உணவகம் அருகில்)
மிகநவீனமான காட்சியறை கொண்ட நகைகளின் அரங்கம்...
நந்தினி நகைமாடம் கண்டி வீதி
(சிறிஅமலா நகைமாடத்துடன் இணைந்தது)
அதிநவீன மிக்சர் கமரா கொண்ட கலைப்படைப்புக்கு...
சுப்பஸோ-வீடியோ (ரவி ஒளி கானம்)
கண்டி வீதி, சாவகச்சேரி.
(சிறிஅமலா நகைமாடம் அருகில்)
வன்னித் தொடர்புகளுக்கு :-
சுப்பஸோ வீடியோ (சிறி படப்பிடிப்பு கலையகம்)
407, சில்வா றோட், வட்டக்கச்சி.
(சீ/4070)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 03-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org